# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பகவான் நம் பாவங்களுக்குப் பாகுபாடுகள் செய்து, விதவிதமான நரகங்களை ஏற்படுத்தித் தண்டிக்கிறான், என்பதைத் தான் நாம் கருடபுராணம் மூலம் அறிகிறோம். ஏற்கனவே சொல்லப்பட்டவை தவிர இன்னும் பல நரகங்களும் அவற்றுக்கான விவரங்களும் தொடர்கின்றன.

விசனம், லாலாபக்ஷம், சாரமேயாதனம், என்று சில நரகங்கள் உண்டு. இவை முறையே பசுவதை, மனைவியை விபரீதக்காம உறவுக்கு ஆளாக்குதல், வீடுகளுக்குத் தீ வைத்துப் பெரும் மக்கள் தொகையைக் கொல்லுதல், ஆகிய பாவங்களுக்குத் தண்டனை ஸ்தானங்கள். பொய் சாட்சி சொன்னால் வரும் நரகம் அவீசி. குடிக்காதவனைக் குடிக்க வைத்துக் குடி கெடுக்கும் குடிகேடர்கள் செல்வது பரிபாதனம். பெரியோரை அவமதித்தல், மனித மாமிசம் புசித்தல், நம்பிக்கை துரோகம் செய்தல் ஆகியவற்றுக்குக் காத்திருக்கும் உலகங்கள் முறையே க்ஷாரகர்த்தமம், ரக்ஷோகணம், சூலரோதம் ஆகியவை.

துரோகிகளுக்கு தந்தசூகம், பிராணிகளைக் கொடூரமாக கொலை செய்பவர்களுக்கு வடாரோதம், வீட்டுக்கு வந்த விருந்தினரை அவமதிக்கும் சுயநலக்காரர்க ளுக்கு பர்யாவர்த்தனகம், அநியாய சம்பாத்யம் செய்பவர்களுக்கு சூசீமுகம் என இப்படி ஒரு நீண்ட பட்டியலைக் காட்டிப் பெருமாள் பாவிகளை அச்சுறுத்துகிறார்.

இறந்தவனைக் குறித்து ஓராண்டுவரை நாள்தோறும் உதக கும்பதானம் செய்ய வேண்டும். மாதம் ஒருமுறை செய்யப்படுவது மாசிகம் என்றும், ஆண்டின் இறுதியில் செய்யப்படுவது வருஷாப்திகம் என்றும் அழைக்கப்படும். இதனால் இறந்தவன் மகிழ்கிறான்; எமலோகமும் திருப்தியடைகிறது. ஓராண்டு முடியும் போது இறந்தவன் பிண்டத்தால் ஆன உடலோடு எமபுரியை அடைய நெருங்குகிறான். அப்பொழுது அவனுக்கு அந்த சரீரம் நீங்கி கையின் பெருவிரல் அளவு உள்ள ஒரு புதிய வடிவம் பெற்று ஒரு வன்னி மரத்தில் சிறிது காலம் தங்கும்படி வைக்கப்படுவான். பிறகு அவன் செய்த கர்மத்தைப் பொறுத்து கர்ம சரீரம் பெறுகிறான். அதன் பிறகு அவன் யமபட்டணத்திற்குள் நுழைகிறான்.

யமதர்ம ராஜனுடைய பட்டணம் சுவையாக விவரிக்கப்படுகிறது. அந்த பட்டணத்திற்குள் நுழையும் முன் சித்ரகுப்தனுடைய பட்டிணத்தை தாண்டி உள்ளே போக வேண்டும். அதுவே 20 காத விஸ்தாரமுள்ளது எனப்படுகிறது. யமனுடைய அரண்மனையில் யமன் அருகில் தர்மத்வஜன் என்ற பெயருள்ள ஒருவன் எப்பொழுதும் நின்று கொண்டு இருப்பான். இவனுடைய கடமை யமன் முன் வந்து நிற்பவன் நல்லவனா? கெட்டவனா? என்று விமர்சிப்பது. இறந்தவனைக் குறித்து பூமியில் இருப்போர்கள் கோதுமை, கடலை, மொச்சை, எள், கொள்ளு, பயறு, துவரை, ஆகிய ஏழு வகையான தானியங்களை ஒரு பாத்திரத்தில் வைத்து தானம் செய்தால் தர்மத்வஜன் யமனிடம் இந்த ஜீவன் நல்லவன் என்று சொல்வானாம். இப்படியெல்லாம் இறந்தவர்களுக்காக நாம் கஷ்டப்பட வேண்டுமா என்று நமக்கு நினைக்கத் தோன்றும். ஆனால் நாளைக்கு நாம் இறந்தபிறகு நம்மைப் பற்றி பூமியில் இருப்பவர்கள் அப்படி நினைக்காமல் இருக்க வேண்டுமானால் இப்பொழுது நம் கடமையை நாம் செய்ய வேண்டும்.

யம பட்டிணத்தைப் பற்றியும், யமனைப் பற்றியும் பெருமாள் ஒரு விந்தையான செய்தி சொல்லுகிறார். அதாவது அவனும் அவன்

பட்டிணமும் பாவிகள் கண்களுக்கு பயங்கரமாகத் தெரியுமாம். நல்லவர் கண்களுக்கு ரம்யமாக இருக்குமாம். அது மட்டுமல்ல நல்லவர்களுக்கு மதிப்பளிக்கும் பழக்கமும் யமனுக்கு உண்டு. சூரியமண்டல மார்க்கமாக பிரம்மலோகம் செல்லக் கூடிய தகுதி உள்ள ஒரு நல்லவன் எமலோகம் வந்தால் யமன் தன் ஆசனத்தை விட்டு எழுந்து நின்று அவனுக்கு மரியாதை செலுத்துவான் என்கிறார் பெருமாள். இல்லையென்றால் தன் கிங்கரர்களைக் கொண்டு ஆயுதங்களால் இம்சிப்பானாம். நமக்கு மரியாதை வேண்டுமா? தண்டனை வேண்டுமா? என்பதை நாமே முடிவு செய்துக் கொள்ள வேண்டியது.

மிகுந்த புண்ணியம் செய்த நல்லவர்கள் யமன் முன் நிறுத்தப்படும் போது அவனுக்கு தேவசரீரம் கொடுக்கப்படும். அவன் தேவனாக மாறி, தேவர் உலகம் செல்வான். ஆக, நல்லவர், தீயவர் அனைவரும் அவனைச் சந்திக்கத் தான் வேண்டும். ஆனால் பாஷ்யகாரராகிய இராமானுஜர் சம்பந்தம் பெற்று, ஆழ்வார் பாசுரங்களைத் துதித்துத் திருமால் அடியவனாக வாழ்ந்தவனுக்கு இந்த நிர்பந்தம் எல்லாம் இல்லை. அவன் உடலை உகுக்கும் போதே ஸ்ரீவைகுண்டத்திலிருந்து அவனைக் கூட்டிப் போக நித்ய சூரிகளோ அல்லது எம்பெருமானோ அவரவர் தகுதிப்படி வந்து அழைத்துப் போவர். கருட புராணத்தைப் படிக்கும் போதாவது ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தின் பெருமையை நாம் உணர வேண்டும் என்பதற்காகத் தான் இந்த கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது. இந்த இடத்தில் மனித உடலின் புன்மையை பெருமாள் விவரிக்கிறார்.

செல்வத்தில் பெரியவனானலும், அறிவிலே உயர்ந்தவனானாலும், கலைகளில் நிபுணன் ஆனாலும், மதத்தை நிறுவிய தலைவன் ஆனாலும், மன்னர் மன்னனான சக்ரவர்த்தி ஆனாலும், அவன் இறந்தவுடன் அவன் உடலில் உள்ள அரை நாண் கயிறு கூட அறுத்தெறியப்படும். அவன் உடைமைகள் ஒன்றும் உடன் வருவதில்லை. அவனைப் புதைத்தால் மண்ணோடு மண்ணாவான். கண்டதுண்டமாக வெட்டி எறிந்தால் நாய் நரிகளுக்கு உணவாவான். தகனம் செய்தால் சாம்பலாவான். அறிதினும் அரிதாகிய மானிட உடல், அதுவும் கூன் குருடு செவிடு மலடு நீங்கிப் பிறந்த உடல் நல்ல முறையில் பயன்படுத்தப் பட்டால் ஆன்மா நற்கதியடையக் காரணமாகும். அங்ஙனமின்றி நல்ல குலத்தில், நல்லோர் மத்தியில் பிறந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வாய்ப்பை வீணாக்கினால் அமிர்தம் நிறைந்த பொற்கலசத்தைப் பூமியில் கவிழ்த்து விட்ட மடையன் தான் அவன் என்கிறார் பெருமாள்.

அடுத்து, கருடாழ்வார், எம்பெருமானிடம் பிரேத ஜென்மம், பற்றிய விரிவான விளக்கங்கள் தெரிய வேண்டும் என்று கேட்கிறார். அதற்கு முழு முதல் நாரணன் நீண்ட பதில் ஒன்றைத் தருகிறார். பிரேத ஜென்மம் என்பது ஒருவன் இறந்தவுடன் வேறு சரீரத்தை அடையாமல் காற்று ரூபமான நிலையில் இருப்பதாகும். பாவம் செய்தவன் தான் இந்த நிலையில் இருப்பான். "ஆவியாய் அலைகிறான்" என்று நாமெல்லாம் சொல்வது இந்த நிலையைத் தான். இந்த ஆவிகள் உலகத்தைப் பற்றி முழு விவரங்களைப் பெருமாள் தருகிறார். பிரேத ஜென்மத்தை அடைந்தவன் பித்ருக்களின் தினத்தில் பித்ருக்களை வீட்டுக்குள் நுழைய விடாமல் துரத்துவானாம். குடும்பத்தில் உள்ளவர்களைப் பலவகையாகத் துன்புறுத்துவானாம். அந்த விளக்கங்கள் அடுத்த கட்டுரையில்.


**சென்னைப் பல்கலைக் கழகத்தில் தபால் கல்வி மூலம்**
**B. A., வைணவம் அல்லது M. A. வைணவம் பட்டப் படிப்பு**

சென்னைப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி மையத்தில் நடத்தப்படும் B. A. வைணவம் பட்டப் படிப்பில் சேர்வதற்கு P.U.C. அல்லது +2 தேறியிருக்க வேண்டும். M.A.வைணவம் பட்டப் படிப்பில் சேர்வதற்கு B.A., B.Sc., B.Com அல்லது B.Litt போன்ற ஏதாவதொரு இளங்கலை (Bachelor Degree) படித்துத் தேறியிருக்க வேண்டும். தகுதியுடையவர்கள் சென்னைப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி மையத்திலிருந்து அல்லது ideunom.ac.in என்ற வலைத்தளத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெறலாம்.